C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 16 JUNE 2024 ஆகாரம் : 06



## நன்மை தீமை

இன்னதென்று வகையறுக்கவும்,
அடியேனுக்கு ஞானமுள்ள
இருதயத்தை தந்தருளும்

-1 இராஜாக்கள் 3:9

So give your servant a discerning heart to govern your people and to distinguish between

## GOOD AND BAD

-1 KINGS 3:9

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| WED<br>7.30 PM | BIBLE STUDY & PRAYER<br>PARSONAGE<br>CONTACT: THE PRESBYTER - 0567668348 |
| 1ST SAT<br>9.15PM | EVERY FIRST SATURDAY,<br>CBS TEACHERS MEETING,<br>CHURCH HALL,<br>MRS. DIVYA SHERIN- 0563973466. |
| SAT<br>7.30 PM<br>9.00 PM | 1ST AND 3RD SATURDAY<br>HOLY COMMUNION SERVICE<br>CONTACT: THE PRESBYTER - 0567668348 |
| 2ND SAT<br>9.00 PM<br>9.30 PM | 2 ND SATURDAY OF EVERY MONTH<br>MEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR - 0508429659 |
| 3RD FRI<br>7.00 PM<br>8.00 PM | 3 RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS.SAGENA LIVINGSTON - 0553896871 |
| 4TH FRI<br>7.00 PM<br>8.00 PM | 4 TH FRIDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR.STEPHEN CHELLARAJ - 0569906933 |



# FROM THE PASTOR'S DESK

**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.**

கடந்து வந்த காலங்களில் தாயும் தந்தையுமாக உடனிருந்து சுமந்து காத்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.சென்ற ஆண்டு 01.06.2023, அன்று விடியற்காலை ஐக்கிய அரபு அமீரகம் வந்து சி.எஸ்.ஐ. அல்அய்ன் திருச்சபைக் குடும்பத்தோடு இணைந்து ஓராண்டு திருப்பணியை நிறைவேற்றிட ஆண்டவர் தந்த மாபெரும் தயவிற்காக அவரின் திருப்பாதங்களுக்கு குடும்பத்துடன் நன்றிகளை செலுத்துகிறோம். திருச்சபையினர் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

தற்போதைய நூற்றாண்டை "அறிவாளிகள் நூற்றாண்டு" (INTELLECTUAL'S ERA) என சொல்வது உண்மையே. காரணம் இன்றைய சூழலில் 3—5 வயது குழந்தை கணினியை இயக்குகிறது. இது உலகம் தருகிற அறிவு, அதாவது நூல்கள் வழியாக கற்றுக் கொள்ளுகின்ற அறிவு. ஆனால் ஞானம் (WISDOM) என்பது ஆண்டவர் இயேசு தருகின்றதாகும். இதனையே ஜான் கால்வின் என்கிற இறையியலாளர் ஞானம் என்பது விண்ணிலிருந்து வருகிறது எனப்புரிந்து கூறுகின்றார்.ஞானம் இறைவனின் முக்கிய அருள்கொடை. இதனைப் பெற்றுக் கொள்ள கர்த்தருக்கு பயந்து வாழ வேண்டும் என்று சாலமோனின் நீதிமொழிகள் 1:7—ல் "கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்று தெளிவுபடுத்துகின்றார்.

### 1. அன்பு கூறுங்கள்:

சாலமோன் அரசர் கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து வாழ்ந்தார், அவரின் தகப்பன் தாவீது கட்டளையிட்ட அனைத்தின்படியும் நடந்தார். (1இராஜாக்கள் 3:3) நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் நிறைவை பெற்றுக்கொள்ள, கர்த்தரிடத்தில் முழு மனதுடன் முழு ஆத்துமாவுடன் அன்பு கூற வேண்டும்.

**2. நன்றி செலுத்துங்கள்:**

அன்றைக்கு சாலமோன் நன்றி அறிதலோடு ஆண்டவரின் சமுகத்தில் ஆயிரம் சர்வாங்க தகன பலிகளை செலுத்தினார். (1இராஜாக்கள் 3:4) இன்றைக்கு நாமும் நன்றியறிதலோடு ஆண்டவர் சமுகத்திலே அவருக்கு துதிகளை ஏறெடுப்போம்.என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி. (சங்கீதம் 103:1)

**3. தாழ்த்துங்கள்:**

அரசராக இருந்த சாலமோன் தன்னை ஒரு சிறு பிள்ளை என ஆண்டவரின் முன்னர் தாழ்த்துகின்றார். "நானோவென்றால் போக்குவரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன்" என்று தன்னை தாழ்த்துகின்றார். (1இராஜாக்கள் 3:7) அறிவியல் பெருகி உள்ள இக்காலத்தில் மேட்டிமை உயர்ந்து கொண்டே இருக்கிறது.ஆனால் நம்மை தாழ்த்தவும், ஆண்டவர் சமுகத்திலே வெறுமையாக்கவும் ஆண்டவர் இயேசு நம்மை அழைக்கிறார். தன்னை தாழ்த்துகிறவனே உயர்த்தப்படுவான். (மத்தேயு 23:12)

**4. வேண்டுங்கள்:**

சாலமோன் அரசர் ஆண்டவரிடத்திலே, "ஞானமுள்ள இருதயத்தை தாரும்" என்று வேண்டினார். (1இராஜாக்கள் 3:9) அந்த விண்ணப்பம் ஆண்டவர் பார்வையில் உகந்ததாக இருந்தது. அதனால் அவர் எல்லா நலன்களையும், வளங்களையும் பெற்று அரசாட்சி புரிந்தார்.

அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசுவினிடமும் உடன் வாழும் சகோதர, சகோதரிகளிடத்திலும் மெய்யான அன்பு கூர்வோம். உள்ளார்ந்த மனத்துடன் ஆண்டவர் இயேசுவுக்கு நன்றி செலுத்துவோம். நம்மை உணர்ந்தவர்களாய் அர்ப்பணிப்புடன் அவர் திருமுன்னர் தாழ்த்திடுவோம். ஆண்டவரை நோக்கி விசுவாசத்துடன் வேண்டிடுவோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்து தாமே அனைத்து நிறைவையும் ஈந்து நம்மை ஆசீர்வதித்து காப்பாராக,ஆமென். இறைப்பணியில், ஆயர்.

இறைப்பணியில்,ஆயர்.

**Rev. S.Baktha Thiyagarajan**





# கருணையுள்ளவர்

*ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.*

*எபிரேய மொழியிலே தபீத்தா என்றும் கிரேக்க மொழியிலே தொற்கா எனவும் அழைக்கப்பட்டவர். சவுல்-பவுல் என்று அழைக்கப்பட்டது போல் இரண்டு பெயர்களை சூழலுக்கு ஏற்ப அழைக்கப்பட்டவரே தொற்கா ஆவார்.*

*தொற்காள் யோப்பா பட்டணத்தில் வாழ்ந்தவர். அது ஒரு துறைமுகப் பட்டணம். இவர் சீடராக இருந்தவர் எனவும் சொல்லப்படுகிறது. (அப்போஸ்தலர் 9:36) தொற்காள் தன்னுடைய பக்தியை வார்த்தையால் காட்டவில்லை, மாறாக நல்ல செயல்கள் மூலம் செய்து காட்டியுள்ளார். அதாவது ஆதரவற்றவர்களையும், விதவைகளையும் அவர்களை வாழ வைப்பதற்காக செய்துள்ளது எவ்வளவு மேன்மையானது.*

*நான் ஆடையின்றி இருந்தேன் எனக்கு ஆடை கொடுத்தீர்கள், இந்த சிறியவருக்கு எதை செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள். (மத்தேயு 25:36) இத்திரு வசனம் தொற்காள் உள்ளத்தில் பசுமரத்து ஆணி போல் பதிந்ததால் தான் எளிமையான ஏழைக் கைம்பெண்களுக்கு கருணை உள்ள ஒரு தாயாக வாழ்ந்திருக்கிறார்.*

*மோசே தமது கையில் இருந்த தடியால் இஸ்ரவேல் மக்களை அடிமைத்தன வாழ்வில் இருந்து மீட்டது போல, தொற்காள் தமது கையில் இருந்த ஊசியால் உதவி செய்து அநேக கைம்பெண்களையும், திக்கற்றவர்களையும் ஆதரித்துள்ளார்.*

*இயேசுவைப் பற்றி சொல்லவில்லை, அருளுரை எதுவும் ஆற்றவில்லை. ஆனால் இவர் தயாரித்து கொடுத்த அங்கிகளும், ஆடைகளும் ஆண்டவர் இயேசுவை அறிவதற்கு சாட்சியாக இருந்தன.*

எத்தனையோ தொண்டு நிறுவனங்களுக்கு தொற்காள் முன்னோடியாக வாழ்ந்து இருக்கிறார். இப்படி மனித நேயத்தின் முகவரியாக இருந்தவர் தான் திருமறையில் இரு மொழிகளில் இவரது பெயர் இடம் பெற்றுள்ளது.

இவரின் பொருளையும், உழைப்பையும் வைத்து பிறருக்கு உதவியது போற்றப்படத்தக்கது. தொற்காள் மரித்த போது அடக்கம் செய்ய எந்த ஒரு செயலையும் செய்யவில்லை. மாறாக பேதுருவினிடத்தில் ஓடி தெரிவிக்கின்றார்கள், உடனே பேதுரு வருகின்றார். அப்போது தொற்காலாள் பயன் பெற்றவர்கள் ஆடைகளைக் காட்டி, உதவிகளை செய்ததை பேதுருவிடம் சொல்லி அழுதார்கள். இதைக் கேட்ட பேதுரு இவர் மீண்டும் உயிர் பெற்றால் அநேகருக்கு உதவியாக இருப்பார் என எண்ணி ஆண்டவரிடத்தில் ஜெபிக்கிறார். தொற்காள் உயிர் பெற்றபோது தொற்காளை பரிசுத்தவான்களுக்கும் விதவைகளுக்கும் முன்பாக நிறுத்துகிறார். (அப்போஸ்தலர் 9:41) அங்கு இருந்த அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர்.நாமும் கூட வாய்ப்பு இருக்கும் போதே தொற்காளை போல் உதவி செய்து விட வேண்டும் என்றும், தேவையில் உள்ளவர்கள் அநேகர் உண்டு நாம் என்ன செய்கிறோம் கண்டும் காணாதவர்களை போல் செல்கிறோமா? அல்லது எனக்கென்ன நான் தான் செய்ய வேண்டுமா வேறு யாராவது செய்யட்டும் என்று நினைக்கிறோமோ? சிந்தித்து செயல்படுவோம், இனியும் காலம் செல்லாது. "பசியாய் இருந்தேன் எனக்கு போஜனம் கொடுத்தீர்கள்...." (மத்தேயு 25:36-40) இந்த திரு வசனங்களை நம் வாழ்வில் வாழ்ந்து காட்டுவோம், கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

இறைப்பணியில்,

ஆயரம்மா

Mrs .P .Velanganni





# செயலர் மடல்

**கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.**

இந்த வருடத்தின் ஐந்து மாதங்கள் முழுவதையும் நம் அனைவரையும் கண்மணி போல் காத்து வழிநடத்தின கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.இந்த ஆறாம் மாதத்திலும் நம் அனைவரையும் சுகமாக ஆண்டவர் இயேசு காப்பதற்காக விசுவாசத்தோடு ஜெபிப்போம்.கடந்த மே மாதத்தில் SHARRING & CARRING மூலம் அல்அய்ன் பண்ணையில் உள்ள மக்களுக்கு உணவுடன் மளிகைப் பொருட்கள் வழங்கினோம். அதற்கெனக் ஜெபித்த,உழைத்த, அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். நமது திருச்சபையின் 2023– 2024 ஆம் ஆண்டின் பொதுக்குழு கூடுகை (A.G.M) கடந்த மே மாதம் 25 ஆம் தேதி நடத்திட ஆண்டவர் கிருபை செய்தார், கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அக்கூடுகையில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றியை தெரிவிக்கிறோம். நம்முடைய திருச்சபையில் நடைபெறுகிற அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபிப்போம். திருச்சபையாக நாம் தாங்கி வருகிற இரண்டு மிஷனரிகள், அவர்கள் சார்ந்துள்ள மிஷனரி ஸ்தாபனங்களின் பொறுப்பாளர்களுக்காக ஜெபிப்போம்.

நமது சிந்தனைக்கு, பஸ்கா என்றால் என்ன? பஸ்கா என்பது ஒரு கிரேக்க வார்த்தை ஆகும். எபிரேயத்தில் பஸ்காவை பேஷாக் என அழைப்பார்கள். பேஷாக் அல்லது பஸ்கா என்றால் கடந்து செல்லுதல் என அர்த்தமாகும். ஆங்கிலத்தில் PASSOVER என அழைப்பார்கள். பஸ்கா என்ற வார்த்தை தமிழ் திருமறையில் பழைய ஏற்பாட்டில் 48 வசனங்களிலும், புதிய ஏற்பாட்டில் 28 வசனங்களிலும் எழுதப்பட்டுள்ளது. பஸ்கா என்றால் புதிய துவக்கம் எனவும் கூறலாம். ஏனெனில் இஸ்ரவேலர்கள் இந்த பஸ்கா மூலமாக

எகிப்தில் இருந்து விடுதலையாக்கப்பட்டு புதிய விடுதலையான வாழ்க்கையைக் கானானில் வாழத் துவங்கினார்கள். பழைய ஏற்பாட்டில் இந்த பஸ்கா ஆடு அடிக்கப்பட்டது புதிய ஏற்பாட்டின் காலத்தில் நமக்காக நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் அடிக்கப்பட்ட ஆண்டவர் இயேசு வுக்கு நிழல் ஆட்டமாக இருக்கிறது.எனவே தான் பவுல் இயேசுவை நம்முடைய பஸ்கவாகிய கிறிஸ்து என்று 1கொரிந்தியர் 5:7—ல் குறிப்பிடுகிறார். யோவான் ஸ்நானகன் இயேசுவை உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி எனக் குறிப்பிடுகிறார். (யோவான் 1:29) எனவே ஆண்டவர் இயேசுவை பற்றி கொள்வோம், தொடர்ந்து ஜெபத்தோடு பயணிப்போம். கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக, ஆமென்.




இறைப் பணியில்

Mr. C . Havin Heba

திருச்சபைச் செயலர்





# யோனத்தானோடு இருந்த வாலிபன்

யோனத்தானை குறித்து அல்ல, யோனத்தானோடு கூட இருந்த வாலிபனை குறித்தே எழுத விரும்புகிறேன். இந்த வாலிபனின் பெயர் குறிப்பிடப்படவில்லை. திமேயுவின் மகனாகிய பர்திமேயு என்று பிச்சைக்காரனின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நாகமானின் குஷ்டரோகம் நீங்க காரணமாயிருந்த சிறுமியின் பெயர் வேதத்தில் குறிப்பிடப்படவில்லை. சமாரியாவிலுள்ள ஒரு பெண் முழு பட்டணத்தையும் இயேசுவினிடத்தில் கொண்டு வந்தாள். ஆனால் அவளது பெயரும் வேதத்தில் குறிப்பிடப்படவில்லை. ஐந்து அப்பமும் இரண்டு மீனும் வைத்திருந்த ஒரு பையன் ஐயாயிரம் பேர் போஷிக்கப்பட காரணமாயிருந்தான். அவனது பெயரும் வேதத்தில் குறிப்பிடப்படவில்லை. நான்கு ஆசாரியர்களை நோக்கி, யோசுவா 'நீங்கள் தண்ணீரிலே கால் வைக்கும்போது தண்ணீர் இரண்டாக பிளக்கும்' என்று சொன்னான் அந்த நான்கு பேரின் பெயரும் வேதத்தில் எழுதப்படவில்லை. இந்த ஆயுததாரியின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. தன்னை எல்லாரும் பார்க்க வேண்டும, விசாரிக்க வேண்டும் எல்லாரும் அடையாளம் கண்டு கொளள் வேண்டும் என்ற ஆசை எல்லாருக்கும் உண்டு.

யோனத்தான் தன் ஆயுததாரியாகிய வாலிபனை நோக்கி, 'விருத்தசேதனம் இல்லாதவர்களுடைய அந்த தாணைத்ததுக்கு போவோம் வா' என்று சொன்னபோது, 'இதோ உம்முடைய மனதுக்கு ஏற்றபடி நானும் உம்மோடே கூட வருகிறேன' என அந்த வாலிபன் ஆயத்தமாயிருந்தான். தேவனோடு கூட இணைக்கப்பட்டிருக்கின்ற நாம் ஒரு சாதாரண குடும்பத்திலிருந்து வந்தவர்களாக இருக்கலாம். திறமைகள் இல்லாதவர்களாயிருக்கலாம். நாம் பெரிய குடுமப்ததை சேர்ந்தவர்கள் என்பது முக்கியமல்ல, தேவனுக்கு நம்மை கையளித்திருக்கின்றோமா என்பதே முக்கியம்.

'யுத்தநாள் வந்தபோது, சவுலுக்கும் அவன் குமாரனாகிய யோனத்தானுக்குமேயன்றி, சவுலோடும், யோனத்தானோடும் இருக்கிற ஜனங்களில் ஒருவர் கையிலும் பட்டயமும் ஈட்டியும் இல்லாதிருந்தது'. – (1சாமுவேல் 13:22).

பெலிஸ்தியரோடு யுத்தம் செய்ய ஜனங்கள் வந்திருந்தார்கள் என்ற போதிலும், அவர்களது கைகளில் ஆயுதங்கள் இல்லை, இந்த சூழ்நிலையினை அந்த வாலிபன் பொருட்படுத்தவில்லை. மற்றவர்களிடத்தில் என்ன இருக்கின்றது என்பதையும் கவனிக்கவில்லை. 'கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செயவார். அநேகம் பேரை கொண்டாகிலும், கொஞ்சம் பேரை கொண்டாகிலும், ரட்சிக்க கர்த்தருக்கு தடையில்லை' என்று யோனத்தான் சொன்ன வார்த்தைகள் இந்த வாலிபனது உள்ளத்தில் விசுவாசத்தை வர்த்திக்க பண்ணியது. 'நாம் சுற்றிலுமுள்ள நிலையினை பாராமல், கர்த்தரையே நோக்கி பார்த்தால் நம்மால் எல்லாம் கூடும். நமக்காக கர்த்தர் காரியத்தினை செய்வார்' என்ற விசுவாசத்துடனே யோனத்தானுடன் அவன் புறப்பட்டு சென்றான். எந்தவித பாதுகாப்பும் இல்லாமலிருந்தாலும் ஜனங்களுக்காக யுத்த களத்தில் நிற்பதற்கு அந்த வாலிபன் ஆயத்தமாயிருந்தான்.

ஒருவரது கையிலும் ஒன்றுமில்லாதிருக்கும்போதும், பாளையத்திற்குள், தாணையத்திற்குள் பயங்கரமாயிருக்கும் இடத்திற்கு கூப்பிடுகின்றீரே என அவன் சொல்லாமல், இதோ ஆயத்தம் என யோனத்தானுடன் புறப்பட்டான். விசுவாசம் ஒரு போதும் கையையும், பையையும் பார்க்காது. தன்னோடு தேவன் இருக்கிறாரா என்பதை மாத்திரமே அது சோதித்தறியும். அன்றன்றுள்ள அப்பத்தை நமக்கு தருவதற்கு தேவன் நல்லவர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். விசுவாசிக்கிறவன் பதறான்.

யோனத்தானின் கையில் பட்டயமிருக்கிறது, யோனத்தான் வெட்டி கொண்டே போவான். 'என்னை யாராவது நெருங்கினால் நான் என்ன செய்வேன், என்னை காப்பாற்றக்கூட என்னிடத்தில் பட்டயம் இல்லையே' என்ற பயம் அவனிடத்தில் இல்லை. நமது கண்கள் நமது பெலவீனத்தை பார்ப்பதை நிறுத்திவிட்டு, அவரது பெலத்தை பார்க்கட்டும். இரண்டு நாட்கள் நன்றாக ஜெபம் செய்கின்றோம்; ஆனால் தொடர்ச்சியாக அவைகளில் நிலைத்திருக்க முடியவில்லையே, சூழ்நிலைகள் என்னை வீழ்த்திவிடுகின்றதே என்று நினைக்கிறீர்களோ, நமது சுற்றுப்புறத்தையோ, நமது

பெலவீனங்களையோ நாம் பாராமல், பெலமுள்ள அவரையே நாம் நோக்கி பார்த்தால், நாம் வீழ்ந்து போவதில்லை. உலகத்தின் இச்சைகளுக்கும் பெலவீனங்களுக்கும் நம்மை விடுதலையாக்கி, தமது ஆயுதமாக நம்மை பயன்படுத்த தேவன் போதுமானவர்.

கர்த்தருக்கென்று தன்னை ஒப்புகொடுத்தபடியால், எந்த ஆபத்தான வழியில் செல்லவும் இந்த வாலிபன் பயப்படவில்லை. இவர்களை பொறுத்தே தேவ ஜனத்திற்கு வெற்றி, விடுதலை, சத்துருவின் கையிலிருந்து விடுதலையாக்க முடியும் என்பதை அறிந்த இந்த வாலிபன் ஆபத்தான் வழியில் செல்லவும், தலைவனாகிய யோனத்தானுக்கு பின்னாக ஏறி செல்வதற்கும் அவன் அஞ்சவில்லை. என்னிடத்தில் திறமைகள் இல்லையே, நான் தேவனுக்கு எப்படி பயன்பட முடியும் என்று நினைத்து கொண்டிருக்கினறோமோ? தேவன் உங்களை கொண்டே நமது தேசத்தில் பெரிய காரியங்களை செய்ய முடியும் என்பதை மறந்து விடக்கூடாது. நாம் அவருக்காக அடியெடுத்து வைத்தால் நம்மூலம் தேசத்தை அசைப்பதற்கு அவர் ஆயத்தமாயிருக்கின்றார்.


ஆமென் அல்லேலூயா!

So it came to pass in the day of battle, that neither sword nor spear was found in the hand of any of the people who were with Saul and Jonathan; but Saul and Jonathan his son had them.
-1 Samuel 13:22 WEB

ARTICLE BY

## MR. G. STANLEY

MEN'S FELLOWSHIP



# கிறிஸ்துவ பெண்களின் நல்ல பங்கு

பெத்தானியா என்னும் கிராமத்தில் மார்த்தாள், மரியாள் மற்றும் லாசரு வசித்து வந்தார்கள்.

முதலில் மார்த்தாள் தன் இல்லத்தில் இயேசுவை ஏற்றுக் கொண்டாள். (லூக்கா10:38). மார்த்தாள் மூலமாய் மரியாள் ஆண்டவர் இயேசுவை தெரிந்துக் கொண்டாள். ஆனால் மரியாள் தான் இயேசுவின் பாதத்தருகே அமர்ந்து அவருடைய வார்த்தையை கேட்டுக்கொண்டிருந்தாள் (லூக்கா 10:39)

மார்த்தாளோ பற்பல வேலைகளை செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, இயேசுவிடத்தில் என் சகோதரியை எனக்கு உதவ சொல்லுமென்று கேட்டாள். மார்த்தாள்
இயேசுவை விருந்நினராகப் பார்த்தாள். (லூக்கா 10:40)

இயேசு அவளுக்கு பிரதியத்தரமாக, மார்த்தாளே, நீ அநேக காரியங்கனைக் குறித்து கவலைப்படுகிறாய். மரியாளோ தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள் என்றார். (லூக்கா 10:41,42)

நாமும் நம் வாழ்வில் பலருக்கு இயேசுவை அறிமுகப்படுத்தி அவரை அறிந்து கொள்ள உதவி செய்வோம்.


மார்த்தாளும், மரியாளும் இயேசுவிடத்தில் ஆள் அனுப்பி, நீர் சிநேகிக்கிற லாசரு மிகவும் வியாதி பட்டிருக்கிறார் என்று சொல்லச் சொன்னார்கள். (யோவான்11:3) இயேசு அங்கு சென்றார். அதை கேள்லிப்பட்ட மார்த்தாள் இயேசுவிடம் வந்து, ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என சகோதரன் மரித்திருக்க மாட்டான் என்றாள். (யோவான் 11:21) மரியாளோ, இயேசுவிடம் ஓடிச்சென்று அவர் பாதத்தில் விழுந்து கண்ணீர் விட்டாள். (யோவான்11:32)

மரியாளின் கண்ணீரைக் கண்ட இயேசுவும் கண்ணீர் விட்டார். மரியாளின் கண்ணீர் இயேசுவின் இதயத்தை திறந்தது. இயேசுவின் கண்ணீர் பரலோக தேவனின் இதயத்தை திறந்தது. கண்ணீரின் ஜெபம் வல்லமையுள்ளது.

நாமும் நம்மை சோதிப்போம். இயேசு கிறிஸ்துவை நாம் விருந்தினராகப் பார்க்கிறோமா? அல்லது நம் உள்ளத்தில் அவரை ஏற்றுக்கொண்டு நல்ல பங்கை தெரிந்து கொள்கிறோமா?

நம் வாழ்க்கையிலும் அநேக பாடுகளினிமித்தம் நாம் நம்முடைய நல்ல பங்கை இழந்து விடுகிறோம். நாமும் மரியாள் போல் இயேசுவின் பாதத்தருகே அமர்ந்து அவர் வசனத்தைக் கேட்டு, தேவனுடைய ராஜ்யத்திற்கு தேவையான நல்ல பங்கை தெரிந்தெடுத்து, உயிரற்றுக் கிடந்த லாசரு உயிர் பெற்று வாழ்ந்தது போல நாமும் நம் வாழ்வில் உயிரற்ற நிலையில் உள்ள காரியங்களை நம் கண்ணீரின் ஜெபத்தினால் உயிர்பெற செய்வோம்.


ஆமென்.




Article by

## MRS. ROSELIN BALAJI

WOMEN'S Fellowship



# கர்த்தருக்கு கீழ்ப்படிந்தவர்கள்

# THOSE WHO OBEY GOD

ஒரு உயர்ந்த அடுக்குமாடி குடியிருப்பில் ஒருநாள் திடீரென்று தீப்பிடித்து கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. அப்பொழுது அங்கிருந்த பொதுமக்கள் அத்தீயினில் மாட்டிக் கொண்ட ஒரு சிறுவனை கீழே குதித்து விடு என்றார்கள்.ஆனால் அவன் இல்லை நான் குதிக்க மாட்டேன் என்றான். பின்னர் அங்கு விரைந்து வந்த அவன் தகப்பன் மகனே நான் உன் அப்பா வந்திருக்கிறேன், நான் சொல்லுகிறேன் கீழே குதித்து விடு நான் தாங்கிப் பிடித்துக் கொள்வேன் என்றார். அவருடைய தகப்பனின் சத்தத்தை கேட்டவுடன் அவனுக்கு மிகவும் சந்தோஷம்.அப்பா நீங்க எங்க நிக்கிறீங்கனு எனக்கு தெரியல என்றான். அதற்கு தகப்பன் நான் உன்னை தான் பார்த்துக்கிட்டு இருக்கேன் தைரியமாக கீழே குதி என்றார். உடனே அவன் குதித்தான் கீழே இருந்த அவன் தகப்பன் அச்சிறுவனை தாங்கி பிடித்துக் காப்பாற்றினார். அப்பாவின் சொல்படி கேட்டு நடந்தான், காப்பாற்றப்பட்டான்.

### ஆபிரகாமின் கீழ்ப்படிதல்:

கடவுள் ஆபிராமை நோக்கி நீ இந்த நாட்டில் இருந்தது போதும்,இனிமேல் நான் சொல்லும் இடத்துக்கு போ அங்கே உனக்கு ஏராளமான செல்வங்களைக் கிடைக்கச் செய்வேன் என்றார். (ஆதியாகமம் 12:1) ஆபிராமும் கர்த்தர் தனக்கு சொன்னபடியே கர்த்தருக்கு கீழ்ப்படிந்து புறப்பட்டுப் போனான். எழுபத்தைந்து வயதான ஆபிரகாமுக்கு, கர்த்தர் மூன்று சந்ததிகளை வாக்குப் பண்ணினார். முதலாவது, பூமியின் தூளைப்போன்ற சந்ததி (ஆதி 28:14) இரண்டாவது, கடற்கரை மணலைப் போன்ற சந்ததி (ஆதி22:17) மூன்றாவது, வானத்து நட்சத்திரங்களைப் போன்ற சந்ததி (ஆதி26:5) திருமறை கூறுகிறது, "உன் சந்ததி இவ்வளவாய் இருக்கும் என்று சொல்லப்பட்டபடியே" (ரோமர் 4:18) ஆபிரகாம் ஆசீர்வதிக்கப்பட்டார்.

### குறைவு,நிறைவாய் மாறுதல்:

கலிலேயாவில் உள்ள கானாவில் திருமணம் ஒன்று நடைபெற்றது. அத்திருமணத்திற்கு இயேசு அழைக்கப்பட்டு இருந்தார், இயேசுவின் தாயும் அங்கு இருந்தார். திருமண

விழாவில் திராட்சை ரசம் தீர்ந்து போகவே இயேசுவின் தாய் வேலைக்காரரை நோக்கி அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள் என்றார் (யோவான்2:5) இயேசு வேலைக்காரரை நோக்கி,ஜாடிகளில் தண்ணீரை நிரப்புங்கள் என்றார். நீங்கள் இப்பொழுது மொண்டு பந்தி விசாரிப்புக்காரரிடத்தில் கொண்டு போங்கள் என்றார். அவர்களும் ஆண்டவர் இயேசு சொன்னபடியே செய்தார்கள் அவ்வாறு செய்ததினால் அவர்களுடைய குறைவு நிறைவாய் மாறினது.

## கோபக்கினையிலிருந்து தப்பித்துக் கொள்ளுதல்:

யோபுவின் சினேகிதர்களுடைய வாய் வார்த்தைகள் கர்த்தருக்கு பிரியமில்லாதிருந்தபடியினால் கர்த்தருக்கு அவர்கள் மேல் கோபம் மூண்டது. யோபுவின் சிநேகிதர்கள் கர்த்தர் தங்களுக்கு சொன்னபடியே செய்தார்கள். (யோபு 42:9) அவ்வாறே செய்தபடியினால் கர்த்தரின் கோபாக்கினில் இருந்து தப்பித்துக் கொண்டனர்.யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்த போது கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்கு தந்தருளினார். (யோபு 42:10)

இன்று நம்முடைய வாழ்விலும் குழப்பமான நேரங்களிலும், கண்ணீரின் வேளையிலும் நம்முடைய ஆண்டவர் இயேசு நம்முடைய வாழ்வில் என்ன செய்ய சொல்லுகிறாரோ அதன்படியே நாமும் செய்வோமா? செய்யும்போது, குறைவில் நிறைவைப் பெறுவோம்.எல்லா பிரச்சனைகளும் நீங்கலாகி கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெறுவோம்.

"கர்த்தர் சொன்னபடியே செய்திடு - உன் கவலையை புறம்பே தள்ளிடு!"

ARTICLE BY

## MRS. SHERRIN VERSLIN BENNY

YOUTH FELLOWSHIP

# HOW TO KEEP YOUR IMMUNE SYSTEM HEALTHY

ARTICLE BY
MRS. JACKULIN HAVIN

Good nutrition, through healthy eating is essential to maintain your immune system.

No one food or supplement can prevent illness but you may help support your immune system by including these nutrients regularly in your overall eating plan.

| Nutrient | Importance | Sources |
|---|---|---|
| Protein | Help your body with healing and recovery. | Seafood, lean meat, poultry, eggs, beans and peas, soy products and unsalted nuts and seeds.  |
| Vitamin A and Beta Carotene | Regulate and protect against infections by keeping skin and tissues in the gut and respiratory system healthy. | Sweet potatoes, carrots, broccoli, spinach and most of green leafy vegetables, apricots, eggs, and milk.  |
| Vitamin C | Supports the immune system by stimulating the formation of antibodies. | Citrus fruits such oranges, grapefruit and tangerines, kiwi, mango, papaya, strawberries, tomato juice and food fortified with vitamin C such as some cereals  |
| Vitamin E | It is essential antioxidant which may support the immune system. | Fortified cereals, sunflower seeds. Almonds, vegetable oils (sunflower oil), and peanut butter  |
| Zinc | Help the immune system work properly and speed wounds healing. | Lean meat, poultry, seafood, milk, whole grain products, beans and nuts.  |

| Nutrient | Importance | Sources |
| --- | --- | --- |
| **Probiotics** | Good bacteria that promote health. | Cultured dairy products such as yogurt and laban.  |
| **Omega 3 fatty acids** | A type of healthy fats which have anti inflammatory effect. | Fatty fish (Tuna, Sardines, salmon), Flax seeds and chia seeds.  |

Other Nutrients, Including vitamin B6, B12, copper, selenium, and iron also may support immune response and play a role in a healthy eating style.

### Focus on Wellness:

### Balanced eating plan

Aim for 5 to 7 servings of vegetables and fruits daily to get vitamins, minerals and antioxidants that may support immune health.

### Drink water, at least 6 to 8 cups per pay

Water is essential for life. As a major constituent of the body, it has many functions including transporting nutrients and compouns in blood, removing waste products.

### Good hygiene and hand washing

It is important to prevent the spread of germs, Remember to wash hands before and after eating.

### Cope with stress:

Praying , meditation, listening to music writing and physical activity are great ways to help manage stress and may help reduce the risk of some chronic diseases that could weaken your immune system further.

### Adequate sleep:


Lack of sleep contributes to a variety of health concerns, such as a weakened immune system. 7 to 9 hours is recommended each day for adults, and children need 8 to 14 hours, depending on their age.

### Important Notes:

-People with health issues should always seek the advice of their health care provider.




JOSHUA JOSE





JERVIN JOEL




# PRIMARY - C

## MRS. ROSELIN TAMILSELVI



JESSICA ASHOK




KEVIN JOEL



# MINISTRY LEADERS RETREAT





csitamilparishalain.org

# May Manna Winners

## FIND THE WAY

- SHERINSHA
- JOHAN SANJO

## KIDS COLOURING

- JOHANA JOSE
- JANIA PRENI

## CROSS WORD

- SHERINSHA

## WORD SEARCH

- JOHAN SANJO
- JANIA PRENI

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

Email Subject: Your name / Quiz, type / Month - Year

To Church Email: csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# JUDGES 1-11

## நியாயாதிபதிகள் 1–11

JUNE '24 - QUESTIONS

QUIZ TIME?

1. எமோரியரால் நெருக்கப்பட்டவர்கள் யார்?
2. யோசுவா அடக்கம் பண்ணப்பட்ட இடம் எது?
3. பெலிஸ்தரை ஒரு தாற்றுக்கோலால் முறியடித்தவன் யார்?
4. ஏபேர் கூடாரம் போட்ட இடம் எது?
5. நட்சத்திரங்கள் யாரோடே யுத்தம் பண்ணின?
6. தன்னோடு 10 பேரை சேர்த்துக்கொண்டு கர்த்தர் சொன்னபடி செய்தவன் யார்?
7. தங்கள் பெயரை உடைய இடத்திலேயே கொல்லப்பட்டவர்கள் யார்?
8. கிதியோன் மரணத்திற்கு பின் இஸ்ரவேலர் பின்பற்றின விக்கிரகம் எது?
9. எது அபிமெலேக்கின் மண்டையை உடைத்தது?
10. கிலேயாத்திலே பாளையமிறங்கின கூட்டத்தார் யார்?
11. இஸ்ரவேலின் குமாரத்திகள் வருஷந்தோறும் யாருக்காக புலம்புவார்கள்?

### மே- 2024-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. யோசு 13:22 | 2. யோசு 14:13 | 3. யோசு 15:17 | 4. யோசு 16:9 |
5. யோசு 17:17 | 6. யோசு 18:10 | 7. யோசு 19:50 | 8. யோசு 20:4 |
9. யோசு 21:45 | 10. யோசு 22:34 | 11. யோசு 23:13 | 12. யோசு 24:27

திருமதி.பிப்ளின் நெல்சன், திருமதி. ரேனா ஜோஸ், செல்வி. அஜின்ஷா,
திருமதி. ஜெயின் அற்புதக்கனி, திருமதி.ராதிகா செல்வக்குமார்

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

Your Name / Bible Quiz / JUNE'24 / Send to: csitcalain@gmail.com

056 766 8348

Name:

Date:


# Kids

# Coloring



# Find the Way

Name : ..................................................



# WORD SEARCH

## A Baby by the River




When the child grew older, she took him to Pharaoh's daughter and he became her son. She named him Moses, saying, "I drew him out of the water." Exodus 2:3 (NIV)

The puzzle is based on Exodus 2:1-10

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Y | T | C | O | N | A | M | E | D | R | W | R | B | V | I |
| M | W | V | W | Q | B | I | R | T | H | E | N | S | R | C |
| O | S | O | G | Q | A | T | X | C | T | O | M | Y | O | L |
| S | T | S | M | R | Y | M | B | A | R | G | C | A | R | N |
| E | B | E | K | A | Z | G | W | L | C | Y | H | T | N | O |
| S | S | A | T | N | N | K | B | J | A | B | I | X | S | R |
| V | I | F | B | U | M | N | S | P | Z | U | L | N | E | Y |
| N | U | B | G | Y | A | L | I | R | N | T | D | T | G | Q |
| J | E | F | G | M | R | B | Y | L | Q | Z | H | L | U | Y |
| M | P | E | B | A | R | A | A | H | E | G | Z | Z | L | L |
| O | M | R | V | C | I | S | L | N | U | P | F | U | J | Q |
| T | R | F | Y | I | E | K | I | A | A | H | H | Z | D | L |
| H | T | X | J | P | D | E | D | U | L | F | I | J | X | K |
| E | Z | V | Q | G | P | T | P | P | U | X | D | S | K | N |
| R | F | C | S | M | E | W | N | A | X | W | H | Q | N | X |

| | | | | |
|---|---|---|---|---|
| SON | DAUGHTER | MARRIED | WATER | MOSES |
| NILE | CHILD | BIRTH | CRYING | MAN |
| BASKET | BABY | WOMAN | MOTHER | NAMED |

Name : ..............................................................

# CROSS WORDS


**Name :** ..............................................................................

## A Baby by the River

When the child grew older, she took him to Pharaoh's daughter and he became her son. She named him Moses, saying, "I drew him out of the water." Exodus 2:3 (NIV)

Puzzle is based on Exodus 2:1-10




ACROSS

1. A woman who has given birth to a child
4. A container that is usually woven of straw and has handles
5. A king of Egypt
6. The world's longest river

DOWN

1. An Old Testament Hebrew prophet
2. A clear, colorless, odorless, tasteless liquid (H2O)
3. A female human offspring
4. A very young child (up to 1 year old)

# JUNE - 2024

| | |
|---|---|
| 03-JUNE | Mr. D. Jeyakumar |
| 04-JUNE | Ms.. Nancy Esther Rajathi |
| 05-JUNE | Mrs. Shalini |
| 06-JUNE | Ms. Jaffrin Jerald |
| 06-JUNE | Mr. Joel Ranjith Kumar |
| 08-JUNE | Mr. Ujin Raj |
| 09-JUNE | Rev. S. Baktha Thiyagarajan |
| 10-JUNE | Mr. P. Chandrasekar |
| 10-JUNE | Mr. Nishan Josap |
| 12-JUNE | Mr. Thiyagu Murugaraj |
| 17-JUNE | Mrs. Anitha Jose |
| 18-JUNE | Mrs. Malini |
| 21-JUNE | Mrs. Segena Livingston |
| 22-JUNE | Mr. Melbin Paul |
| 22-JUNE | Mrs. Baby Christy Monalizha |
| 23-JUNE | Mr. Belfer John Sigamony |
| 23-JUNE | Mrs. Jennifer |
| 27-JUNE | Ms. Shiny Rebeca |
| 27-JUNE | Mr. Prince Pitchiah |
| 30-JUNE | Mr. M. Nesamony |

# JUNE *Wedding* ANNIVERSARY

**01- JUN** Mr. Jeremiah Kingston
&
Mrs. Olivia Sherin


**06- JUN** Mr. Ashok Prasad
&
Mrs. Eben A. Prasad

**15- JUN** Mr. S. Deva Prakash
&
Mrs. Sheeba Deva Prakash

**16- JUN** Mr. K.S. Suji kumar
&
Mrs. D. Berlin Suniba

**21- JUN** Mr.Balaji Ramaiyan
&
Mrs.RoselinTamilSelvi

**29- JUN** Mr. Celin Jose
&
Mrs. Anitha Jose



## CHILDREN BIBLE SCHOOL - KIDS HELPING KIDS

# RITHIKA



**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**

